UPDF
WWW.UPDF.COM

ආයතනයේ නම : ජාතික සත්වෝද්‍යාන දෙපාර්තමේන්තුව

පාර්ලිමේන්තුවේ රජයේ ඟිණුම් කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119 (4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

நிறுவனத்தின் பெயர் : தேசிய விலங்கியல் தோட்டங்கள் துறை

நிலையியற் கட்டளையின் இலக்கம் 119 (4) இன்படி விதிமுறைகளில் பொது கணக்கு குழுவினால் வழங்கப்பட்ட அறிக்கைக்கு ஏற்ப எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் மற்றும் கௌரவ அமைச்சர் அவர்களின் அவதானிப்புகளினதும் சமர்ப்பிப்பு

Name of the Institution: Department of National Zoological Gardens

Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No. 119 (4)

UPDF
WWW.UPDF.COM

பாராளுமன்ற அமர்வு எண் : 290

நிறுவனத்தின் பெயர் : தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களம்

	நிதிச் சட்ட திட்டங்கள் மற்றும் செயலாற்றுகை மதிப்பீட்டின் பிரகாரம் இனங்காணப்பட்ட பலவீனங்கள்	அதற்கு எடுக்கப்பட்டுள்ள செயன்முறைகள் மற்றும் அவற்றின் தற்கால நிலைமை
	முதலாவது பகுதி	
01	சேதங்கள் பற்றிய கோவை புதுப்பிக்கப்பட்டு நடாத்தப்படவில்லை.	சேதங்கள் பற்றிய கோவை நடாத்தப்பட்டுக் கொண்டு செல்லப்படுகின்றதோடு, அது தற்போது புதுப்பிக்கப்பட்டு நடாத்தப்படுகின்றது.
02.	கணக்காய்வாளர். நாயகத்தினால் முன்வைக்கப்பட்டிருந்த ஒவ்வொரு கணக்காய்வுக்குமான ஒரு மாதத்திற்குள் பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை	கணக்காய்வு வினவல்களுக்கான பதில்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஒரு மாதத்திற்குள் வழங்கப்பட்டுள்ளதோடு சில சந்தர்ப்பங்களில் உப அலுவலகங்களின் மூலம் பதில்களை வரவழைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. 2024 ஆண்டிலிருந்து இந்நிலையைத் தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுப்பதென அறியத் தருகின்றேன்.
03	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு குறைந்த பட்சம் தவணைக் கூட்டங்கள் 2 ஆவது நடத்தியிருக்கவில்லை.	2021 ஆண்டில் நாட்டிற்குள் நிலவிய கொரோனா தொற்று நிலைமை காரணமாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் 4 தவணைகளாக நடத்துவதற்கான சாத்தியம் இருக்கவில்லை என்பதோடு, முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள இலக்கம் DMA/AMC/A/2020/5-4 மற்றும்

UPDF
WWW.UPDF.COM

		2020.06.11 திகதிய கடிதத்தின் மூலம் DMA/01-2019 சுற்றறிக்கையில் 5 பந்தியை நிறைவேற்றும் தேவைகளை விடுவித்தலொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது என அறியத் தருகின்றேன். மேலும், 2022 ஆண்டிலிருந்து கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் 04 இனை நடாத்துவது மேற்கொள்ளப்பட்டதோடு, 2024 ஆண்டிலும் முதலாம் தவணைக்குரிய கூட்டமும் இதுவரைக்கும் நடாத்தப்பட்டுள்ளதோடு அக்குழுக் கூட்டத்தின் மூலம் திணைக்களத்துக்குரிய முக்கியமான விடயங்கள் கலந்துரையாடப்படுவது இடம்பெறுவதெனவும் மேலும் அறியத் தருகின்றேன்.
04	2020.08.28 திகதிய இலக்கம் 01/2020 உடைய அரச நிதி சுற்றறிக்கையில் 1 பகுதியில் 11.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள காலப் பகுதிக்குள் உள்ளடக்கப்பட்டுள்ள நி.பி 756 (6) பிரகாரம் பொருள் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு குறிப்பிட்ட தினத்துக்கு உரிய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	எமது திணைக்களத்தின் கீழ் உப நிறுவனங்கள் 04 செயற்படுவதென, உரிய காலப் பகுதிக்குள் உள்ளடக்கப்பட்ட நிபி. 756 (6) பிரகாரம் பொருள் கணக்கெடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் கவனிக்கப்பட வேண்டிய காலப் பகுதியொன்று செல்வதெனவும், 2021 ஆண்டிலும் 2022 ஆண்டிற்கு உரியதாக பொருள் கணக்கெடுப்பு நடவடிக்கைகள் 2023 ஆண்டினுள் நிறைவு செய்வதற்கு மேற்கொள்ளப்பட்டதென, 2023 ஆண்டிற்கு உரியதாக பொருள் கணக்கெடுப்பு இதன் போது இறுதிக் கட்டத்தின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதென, நி.பி. 756 (6) பிரகாரம் குறிப்பிட்ட தினத்துக்குரிய

UPDF
WWW.UPDF.COM

		அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்கப்பட முடியும் என தயவுடன் அறியத் தருகின்றேன்.
05	அனைத்து வாகனங்களிலும் அரச இலச்சினை வரையப்பட்டிருக்கவில்லை.	அரச இலச்சினையை வரைந்த போது வாகனத்தின் பூசப்பட்டிருந்த உரு அழிவுக்கு உள்ளாகியமையினால், அரச இலச்சினையை Board 01 இன் ஆதாரத்தில் தயாரித்து அனைத்து வாகனங்களிலும் பொருத்துவதற்கு நடவடிக்கை அறியத் தருகின்றேன்.
06	வாகனமொன்று சேதத்துக்குள்ளாகி 8 மாதங்களை விடக் குறைந்த காலத்தில் அழிக்கப்பட்டிருக்கவில்லை.	அரச நிதி சுற்றறிக்கை 01/2015 ஒழுங்குவிதிகளின் பிரகாரம் வாகனங்களின் அழித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் வாகனங்களின் தனித்தன்மை பற்றிய சிக்கல்களைத் தீர்ப்பதற்கு பெரும் காலமொன்று எடுத்தமையினால் இது வரைக்கும் வாகனங்களை அழித்தலுக்காக விலைமனுக்களைக் கோரி அழிக்கும் நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. ரா.மு. சுற்றறிக்கை 01/2020 ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கணக்கெடுப்பு சபையொன்றை நியமித்து அழிக்க வேண்டும் என வாகனங்கள் இனங்காணப்பட்டுக் கொண்டிருக்கின்றன.
07	ஒவெவொரு வாகனத்துக்கும் லொக் புதுப்பிக்கும் அடிப்படையில் நடத்திச் செல்லப்பட்டிருக்கவில்லை.	ஆண்டினுள் நிலவிய Covid நிலைமை காரணமாக அதிகாரிகள் வரையறுக்கப்பட்டுள்ள சேவைக்கு அழைக்கப்பட்டதோடு, சாரதிகளும் அத்தியாவசிய சேவைக்கு அழைக்கப்பட்டனர். அதனால், லொக் புத்தகத்தை புதுப்பித்தல் தொடர்பாக சிக்கல்கள் நிலவியதோடு,

UPDF
WWW.UPDF.COM

		அந்நிலைமையை தீர்ப்பதற்கு அனைத்து லொக் புத்தகங்களையும் தற்போது புதுப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதென அறியத் தருகிறேன்.
08	2016.12.29 திகதிய இலக்கம் 2016/30 உடைய அரச நிர்வாக சுற்றறிக்கையில் 3.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நிறுவனத்தினுடைய வாகனங்களில் எரிபொருள் எரிதல் பற்றிய சோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	எரிபொருள் எரிதலை சோதனை செய்வது 2021 ஆண்டில் நிலவிய Covid நிலைமை காரணமாக உரியவாறு மேற்கொள்ளப்படவில்லை என்பதோடு, 2022 ஆண்டிலிருந்து எரிபொருள் எரிதல் பற்றிய அறிக்கைகள் உப நிறுவனங்களிலிருந்து தொடர்ச்சியாக முன்வைப்பதனை உரியவாறு மேற்கொள்ளப்படுகின்றது.
09	வங்கி ஒப்பீட்டு அறிக்கை உரிய தினத்துக்கு ஒழுங்குபடுத்தப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டு கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்படவில்லை.	2023 ஆண்டில் மே மாதத்திலிருந்து வங்கி ஒப்பீட்டு அறிக்கையை உரிய தினத்துக்கு தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்காக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதென தயவுடன் அறியத் தருகிறேன்.
10	வங்கி ஒப்பீட்டு அறிக்கைகளினால் வெளிப்படுத்தப்பட்ட சரி செய்யப்பட வேண்டியிருந்த நிலுவைகள் தொடர்பாக நி.பி. பிரகாரம் ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்படவில்லை.	2021 ஆண்டில் நிலவிய கொரோனா தொற்று நிலைமையின் அடிப்படையில் நிறுவனம் ஆண்டின் அதிக காலப் பகுதியொன்று மூடப்பட்டிருந்ததும், தபால் சேவைகள் செயற்படாமல் இருந்தமையின் அடிப்படையிலும் வங்கி ஒப்பீட்டு அறிக்கைகளினால் வெளிப்படுத்தப்பட்ட சரி செய்யப்பட வேண்டியதாக இருந்த நிலுவைகள் தொடர்பாக ஒரு மாதத்திற்குள் நடவடிக்கை எடுப்பதற்கு முடியாமல்

UPDF
WWW.UPDF.COM

		போனதோடு தற்போது அவ்வனைத்து சீராக்கல்களும் சரி செய்யப்பட்டுள்ளதென தயவுடன் அறியத் தருகின்றேன். அவ்வாறே இது வரையும் ஒப்பீட்டு அறிக்கைகளின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்ற ஒப்பீட்டுகளை ஒரு மாதத்திற்குள் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் மேலும் அறியத் தருகின்றேன்.
11	பொது வைப்புக் கணக்கில் காலம் முடிவடைந்த வைப்புகள் தொடர்பாக நி.பி..571 பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை..	பொது வைப்புக் கணக்கில் காலம் முடிவடைந்த அனைத்து வைப்புகளையும் தற்போது தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதென அறியத் தருகிறேன்.
12	நி. பி 371 பிரகாரம் வெளியிடப்பட்ட இடைக்கால பணிகள் முடிவடைந்து ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்படவில்லை.	நடைமுறை ரீதியாக எழுந்துள்ள சில நிலைமைகள் காரணமாக பெற்றுக் கொள்ளப்பட்ட இடைக்காலப் பணிகளை ஒரு மாதத்திற்குள் தீர்ப்பது மேற்கொள்ளப்படவில்லை என்பதோடு இதுவரையும் இந்நிலைமையை முடிந்தவரை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதென தயவுடன் அறியத் தருகிறேன்.
இரண்டாவது பகுதி		
01	தயாரிக்கப்பட்ட மனித வள திட்டங்களின் மூலம் பணிக்குழுவில் நூற்றுக்கு 50 க்கு அதிகமான பேருக்கு வருடமொன்றுக்கு குறைந்தளவு 12 மணித்தியாலயங்களுக்குக் குறையாத பயிற்சி சந்தர்ப்பமொன்று	2021 ஆண்டில் அரச நிதிக் கட்டுப்பாடு பற்றிய நிகழ்ச்சிகளைச் செயற்படுத்தியமையினால் அதிகாரிகளுக்கு பயிற்சி சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன.

UPDF
WWW.UPDF.COM

	உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	
02.	திட்டமிடப்பட்ட பயிற்சி சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த பயிற்சி சந்தர்ப்பங்களின் அளவு 50%க்கும் குறைய மட்டமொன்றில் காணப்பட்டது.	2021 ஆண்டில் நிலவிய Covid தொற்று காரணமாக அதிகாரிகளை அழைப்பது வரையறுக்கப்பட்டது. வரையறுக்கப்பட்ட பணிக்குழுவின் மூலம் திணைக்களத்தின் பணிகளைப் பூர்த்தி செய்து கொண்டமையினாலும், இந்த நோய்த் தொற்றின் எச்சரிக்கை மிக உயர்ந்த மட்டத்தின் அவதானம் மிக உயர்ந்த மட்டத்தில் நிலவியமையினால் பயிற்சி சந்தர்ப்பங்களுக்காக அதிகாரிகளை ஈடுபடுத்துவது சிரமமானது.
03	நிறுவனத்தின் கணக்குகள் பற்றி கணக்காய்வுக் கருத்து நடைமுறை மட்டத்திலோ அல்லது சாதகமற்ற நிலையில் இருந்தது. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை அரசாங்கத்தின் கணக்குகள் பற்றிய ஆலோனைச் சபையின் பரிந்துரைகள்/ உத்தரவுகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.	2021 ஆண்டில் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் மூலம் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகளை 2022 ஆண்டில் 2023 ஆண்டில் கணக்குகளை ஒழுங்குபடுத்துவதில் தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என தயவுடன் அறியத் தருகிறேன்.

.....

குணதாச சமரசிங்ஹ,
செயலாளர்,
வனஜீவராசிகள் மற்றும் வன
வளங்கள் பாதுகாப்பு அமைச்சு

Gunadasa Samarasinghe
Secretary
Ministry of Wildlife and Forest

.....

எம். எஸ். எல். ஆர் பீ. மாரசிங்ஹ,
பணிப்பாளர் நாயகம்,
தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களம்

M.S.L.R.P. Marasinghe
Director General (Acting)
Department of National Zoological Gardens,
Dehiwala.